முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் புதன் பகவான் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

31.01.2019, வியாழக்கிழமை

1. **மறைகள் போற்றும் மாதருமம்**
**மண்ணுலகை காக்க செய்து வரும்**
**அரங்கனே ஞானத்தலைவனே**
**அகிலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி கலை திங்கள்**
**தெரியவே மூவைீர் திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 17ம் நாள் 31.01.2019, வியாழக்கிழமை)**
**தேசிகனுக்கு புதபகவான் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான உபதேச துறை வழி பணி
ஞானமென சேவை ஆற்றும் மக்கள்
ஞானதேசிகனார் வழி ஆசி பெற்றுவர
4. வருகவே பணியில் பாதுகாப்பும்
வருவாய் வளமும் உயர்வும் காணும்
மாறுதல் தரும் அரங்க ஞானியின்
மகத்துவம் மகிமையை ஏற்று
5. ஏற்று உலக மக்களெல்லாம் வருக
எங்கும் பெருமைபட பரப்பி வர
ஆற்றல் பெருக்கமுடன் உலகமே
ஆறுமுகன் ஆளுமைக்கு வந்து
6. வந்துமே ஞான யுகம் ஆகும்
வணிக உயர் மாந்தர்களெல்லாம்
சிந்தைதனிலே அரங்கமகான் அவதாரம்
சூட்சுமம் தனை ஏற்று ஆசி பெற்று
7. ஆசி பெற்று அன்னதான சேவையில்
அனைவரும் பொருளுதவி செய்து
ஆசியுடன் கொல்லா நெறி ஏற்று
அனைவரும் சன்மார்க்கம் கலந்து
8. கலந்து தொடர்ந்து வருக
கண்ணியமான வாழ்வாதாரம் பெருகி
பலமான தேட்டு தனவளமும்
பணபலம் ஞான பலமுடன் ஆள் மாகாணம்
9. மாகாணம்பட வாழ்வு சிறந்து
மனம்போல பதவி சிறப்பும்
அகவாழ்வில் நிறைவும் மகிழ்வும்
ஆனந்தமுடன் ஆன்ம பலமும் பெருக

10. பெருகவே ஞானியரின் துணைபட
பிசகில்லா பிரச்சனைகளில்லா
ஆறுமுகன் அருளும் தயவும்
ஆளுமையும் கண்டு சிறப்பர்

11. சிறப்புதரும் அரங்கனே வாழ்க
செயமருளும் தேசிகனே வாழ்க
மறுப்பிலா உன் மார்க்கம் ஏற்க
மண்ணுலகே ஞானயுகமாகும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் புதன் பகவான் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

வேதங்கள் எல்லாம் போற்றுகின்ற மாதருமங்களை எல்லையில்லாது செய்து மண்ணுலகை காத்து வருகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே ஞானத்தின் தலைவனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 17ம் நாள் 31.01.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே புதபகவான் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் புதபகவான்.

உயர்வான சேவையாகிய உபதேச சேவை எனப்படும் ஆசிரியர் பணிபுரிவோரும் மற்றும் ஞானவழி சென்று சேவை புரிவோரும் பக்தி வழி சேவை புரிவோரும் ஞானத்தின் தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து அருளாசி பெற்று பணி செய்து வர அவர்கள் பணியில் பாதுகாப்பும், வருவாய் பெருக்கமும் வளம்மிக்க வாழ்வும் பெறுவார்கள்.

வாழ்வினில் தீமைகளை அகற்றி நல்ல மாற்றங்களை தந்தருளும் ஆறுமுக அரங்க ஞானியரின் மகத்துவங்களையும், மகிமைகளையும் அறிந்து தெளிந்து அதனை உணர்ந்தவரெல்லாம் அரங்கனை குலகுருவாக ஏற்றுக் கொண்டு உலகமெங்கம் அரங்கன் புகழை பெருமைபட பரப்பி வர வேண்டும். அவ்விதமே உலகினில் அரங்கனின் புகழ் பரவபரவ உலகினில் ஞான ஆற்றல் பெருகிடும். உலகமெலாம் ஞான ஆற்றல் பெருகி உலகமே முருகப்பெருமானின் ஞான ஆட்சிக்கு வந்து இந்த உலகமே ஞானயுகமாக மாறிடும்.

வியாபாரம் மற்றும் தொழில் செய்கின்ற மக்களெல்லாம் வாணிக உயர் மக்களெல்லாம் அவரவரின் சிந்தையிலே அரங்கனை எண்ணி அரங்கனின் அவதார சூட்சுமங்களை அறிந்து தெளிந்து அரங்கனை குருவாக ஏற்றுக் கொண்டு அரங்கனிடத்து ஆசிகளைப் பெற்று அரங்கன் ஆற்றும் அன்னதான சேவைகளில் அனைவரும் பொருளுதவிகள் செய்து அரங்க மகானின் அருளாசிகளைப் பெற்று உயிர்க்கொலை செய்யாமல், புலால் மறுத்து, சுத்த சைவ உணவை மேற்கொண்டு ஞானமளிக்கும் சன்மார்க்க நெறியினை பின்பற்றி அரங்கமகா தேசிகனாரை பின்தொடர்ந்து வரவர, அவர்களின் வாழ்வாதாரம் கண்ணியத்துடன் பெருகிடும், அதிகமான பொருள் சேர்க்கையும், நல்ல வருவாயும் உண்டாகி பணபலமும், உணர்வுடைய தொழிலாளர்களையும், சிறந்த பணியாளர்களையும் பெறுவதோடு ஞானபலமும் பெற்று சிறப்பான வாழ்வினை வாழ்ந்து அவர்கள் விரும்பிய பதவிகளை பெற்று அகவாழ்விலும் நிறைவும் மகிழ்வும் பெற்று ஆனந்தமுடன் ஆன்மபலமும் பெருகிட புறவாழ்விலும் அகவாழ்விலும் பெருமைமிக்கோராய் வாழ்வதோடு வாழ்வினில் பிரச்சனைகளே இல்லாத வகையிலும் தவறுகளே இல்லாத வாழ்வையும் ஞானிகளின் துணைபட வாழ்ந்து முருகப்பெருமானின் அருளையும் தயவையும் பெற்று நல்ல கெடியான ஆளுகை திறனுடன் வாழ்ந்து சிறப்பார்கள்.

எல்லாவிதமான சிறப்புகளையும் தந்தருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க. ஜெயம் அருளும் ஞானதேசிகனே வாழ்க வாழ்க. மறுப்பில்லாது உமது மார்க்கம் தனை ஏற்று மக்களெல்லாம் பக்தியுடன் பணிந்து பின்பற்றி வந்திட்டால் இந்த உலகமே ஞான உலகமாகிடுமப்பா என உரைக்கின்றார் மகான் புதபகவான்.

–சுபம்–